SRI M. KALYANASUNDARAM : According to us, it is a cold-blooded murder.

SRI M. KARUNANITHI : What is the ruling?

MR. SPEAKER : This is not a matter for an adjournment motion, and therefore the consent is withheld.

திரு மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, தங்களுடைய தீர்ப்புக்குத் தலைவணங்க கட்டுப்பட்டு இருக்கிறோம். கனம் முதல மைச்சர் அவர்கள் மனிதாபிமானத்தோடு நீதிபதி கொண்ட பொது விசாரணை செய்யவேண்டுமென்ற எங்கள் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாத காரணத்தினாலும், அப்படி நீதி விசாரணை காலம்வரை வேலையிலிருந்து சம்பந்தப்பட்ட அதிகாரியை விலக்கி வைக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாத தாலும், இந்த அவசரப் பிரேரணைக்கு, அதில் கண்ட கோரிக்கை களுக்கு அவர் ஒத்துக்கொள்ளாததாலும், அந்தப் போக்கை வன்மையாகக் கண்டிக்கும் வகையில் இந்தச் சபையை விட்டு வெளி நடப்புச் செய்ய வேண்டிய அவசியத்திற்கு ஆளாகியிருக் கிறோம்.

(எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் எல்லோரும் சபையை விட்டு வெளியேறினர்.)

MR. SPEAKER : I have disallowed the adjournment motions of Sri Mathialagan and Sri Rama Arangannal. They do not relate to a specific matter and the general question can be discussed in the discussion on the No-Confidence Motion.

Regarding the notice of an adjournment motion given by the Hon. Member, Sri Saw Ganesan, the Government will have to get information and take suitable action. He may give notice of a short notice question. Therefore, I disallow it. With regard to the notice given by the hon. Member, Sri A. K. Subbiah also, I disallow it.

IV.—DEMANDS FOR GRANTS FOR EXCESS EXPENDITURE IN 1961–62 PRESENTATION.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் சபாநாயகர் அவர்களே, 1961-62-ம ஆண்டில் ஏற்பட்ட அதிகச் செலவுகளுக்கான மானியக் கோரிக்கைகளின் அறிக்கையை நான் சபை முன் சமர்ப்பிக்கிறேன். சில மானியங்களின் கீழ் இறுதியாக அனுமதித்த தொகைகளுக்கும் மேலாக செலவாகியிருப்பது தெரிய வந்தது. பற்பல தலைப்புகளின்கீழ் ஆன அதிகச் செல வினங்களின் மொத்தத் தொகை சுமார் 3 கோடியே 98 லட்சம் ரூபாயாகும். இந்த அதிகச் செலவிற்கு இப்போது சட்டப் பேரவையின் அனுமதி கோரப்படுகிறது. ஒவ்வோர் செலவினத் தின்கீழும் அதிகச் செலவு ஏற்பட்டதற்கான காரணங்கள் விபரமாக இம் மானியக் கோரிக்கைகளின் இணைப்பில் விளக்கப் பட்டுள்ளன. 10–00 a.m.

1963-64-ம் ஆண்டிற்குரிய பொதுக் கணக்குக் குழுவினர் அதிகச் செலவிற்கான காரணங்களை ஆராய்ந்த பின்னர், 1961–62-ம் ஆண்டில் தமிழ்நாடு அரசாங்கக் கணக்குகள் பற்றிய

[திரு. எம். பக்தவத்சலம்] [19th October 1964

அறிக்கையின் 30-வது பாராவில், இந்தச் செலவினங்களுக்கான மானியக் கோரிக்கைகளைச் சட்ட மன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டுமெனப் பரிந்துரை செய்துள்ளனர். அதற்கேற்ப 1961-62-ம் ஆண்டிற்குரிய அதிகச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளின் அறிக்கை இப்போது சமர்ப்பிக்கப்படுகிறது.

1961--62-ம் ஆண்டிற்குரிய அதிகச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளின் அறிக்கையை இம் மன்றம் ஏற்றுத் தன் இசைவினை நல்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

V.—SECOND SUPPLEMENTARY STATEMENT OF EXPENDITURE FOR 1964-65—PRESENTATION.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் சபாநாயகர் அவர்களே, 1964-65-ம் ஆண்டின் இரண்டாவது துணை மதிப்பீடுகளை தங்கள் முன் சமர்ப்பிக்க விரும்புகிறேன். இதுபற்றி, பல்வேறு மானியக் கோரிக்கைகளை விளக்கும் விவர அறிக்கை ஒன்று மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது. இத் துணை மானியக் கோரிக்கைகளின் மொத்த மதிப்பு சுமார் 5 கோடியே 25 லட்சம் ரூபாய் ஆகும். இதில் சுமார் 3 கோடியே 67 லட்சம் ரூபாய் ரெவினியூ கணக்கிலும், 1 கோடியே 58 லட்சம் ரூபாய் மூலதனம்-கடன் கணக்குகளிலும் அடங்கும். இம்மன்றத்தின் முன் தற்போதுள்ள துணை மதிப்பீடுகளில் பெரும்பாலானவை நடப்பு ஆண்டில் அரசாங்கம் அனுமதி அளித்த "புதுப் பணித்" திட்டங்கள் பற்றியனவாகும். அத்துடன் முன்பு வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பெற்ற நிதியைவிடக் கூடுதலாகச் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படும் சில மானியங்களின்கீழ் கூடுதல் நிதியைக் கேட்டுப் பெறவும் இவ்வாய்ப்பனைப் பயன்படுத்திக் கொண்டுள்ளேன்.

2. இந்த துணை மதிப்பீடுகளில் உள்ள முக்கியமான கூடுதல் செலவினங்களில் ஒன்று, அண்மையில் அரசாங்கத்தாரால் அறிவிக்கப்பட்ட அகவிலைப்படியின் உயர்வைப் பற்றியதாகும். இச் செலவினத்திற்காகச் சட்டமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. கடந்த மே மாதத்தில் அகவிலைப்படி வீதங்களை முதல் தடவையாக உயர்த்தி, அதனால் ஏற்பட்ட கூடுதல் செலவிற்காக, முதல் துணை மதிப்பீட்டில் அடையாள மானியம் ஒன்றைப் பெற்றது கனம் அங்கத்தினர்களுக்கு நன்கு நினைவிருக்கலாம். மத்திய அரசாங்கப் பணியாளர்களின் அகவிலைப்படி வீதங்கள் உயர்த்தப்பட்டிருப்பதை யொட்டி, நாமும் இவ்வாண்டு செப்டம்பர் முதல் தேதியிலிருந்து, அதாவது அக்டோபர் முதல் தேதி வழங்கப்படும் செப்டம்பர் மாதச் சம்பளத்திலிருந்து இந்த அகவிலைப் படி வீதங்களை மேலும் உயர்த்தியுள்ளோம். இந்த உயர்வு முன் போலவே ஆசிரியர்களுக்கும், தல ஸ்தாபன ஊழியர்களுக்கும் கிடைக்கும் வகையில் அளிக்கப்பட்டுள்ளது. அகவிலைப்படி